TNVR230017712024

சார்பு நீதிமன்றம், இராஜபாளையம்.

**முன்னிலை - திரு. M. சண்முகவேல்ராஜ், B.A., B.L., L.L.M.,**

சார்பு நீதிபதி, இராஜபாளையம்.

2026 ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 01 ம் நாள் திங்கள்கிழமை

**O.S. No.70/2024**
**( CNR No.TNVR230017712024)**

-------------

தங்கராஜ் ..... வாதி

//எதிர்//

சந்தனமாரி ..... பிரதிவாதி

இந்த வழக்கானது திருவில்லிபுத்தூர் முதன்மை சார்பு நீதிமன்றத்தில் அ.வ.எண்.331/2022 ஆக கடந்த 29.06.2022 அன்று கோப்பிற்கு எடுக்கப்பட்டு வழக்கு விசாரணை நிலுவையில் இருந்து வந்த நிலையில், பின்னர் அதிகார வரம்பிற்குட்பட்டு இந்த வழக்கானது இராஜபாளையம் சார்பு நீதிமன்றத்திற்கு மாற்றம் செய்யப்பட்டு இந்நீதிமன்றத்தில் அ.வ.எண்.70/2024 என கோப்பிற்கு எடுக்கப்பட்டு 25.02.2026 ம் தேதியன்று என் முன்பாக இறுதி விசாரணைக்கு வந்த போது, வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.A.அன்புகுமார் அவர்கள் முன்னிலையாகியும், பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.K.ரமேஷ்பாபு அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு வாதங்களை கேட்டும், வாதியின் வழக்குரை, பிரதிவாதியின் எதிர்வழக்குரை மற்றும் வழக்கு

ஆவணங்களை நன்கு பரிசீலனை செய்தும், இதுநாள் வரை இந்நீதிமன்றத்தின் பரிசீலனையிலிருந்து இந்த வழக்கில் இன்று இந்நீதிமன்றம் வழங்கும் …

**தீர்ப்புரை**

வாதிக்கு, பிரதிவாதி எழுதிக்கொடுத்த அடமான கடன் தொகை ரொக்கம் ரூ.1,50,000/-க்கு ரூ.100/-க்கு ரூ.1/- வட்டி விகிதம் அசலும், வட்டியும் செலுத்த உத்தரவிடக்கோரி முதல் நிலை தீர்ப்பாணை பிறப்பிக்க கோரியும், பிரதிவாதி வாதியிடம் 01.11.2021 ம் தேதி வாங்கிய கடன் தொகை ரூ.50,000/-த்திற்கு அசல் மற்றும் வட்டி சேர்த்து செலுத்துவதற்கு உத்தரவிடக்கோரியும், பிரதிவாதி மேற்படி அடமான தொகையை சமூகம் நீதிமன்றத்தில் செலுத்தாவிட்டால் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட தபசில் சொத்தை ஏலத்தின் மூலமாக எடுத்துக்கொள்ள இறுதிநிலை தீர்ப்பாணை பிறப்பிக்க கோரியும், தாவா வழக்கின் செலவு தொகை வாதிக்கு, பிரதிவாதிகள் செலுத்தக்கோரி உத்தரவிடக்கோரியும், மற்றும் இதர பரிகாரங்களை வாதிக்கு ஆதரவாக வழங்கி தீர்ப்பும், தீர்ப்பாணையும் பிறப்பிக்கக்கோரியும், வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) **வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்குரையின் சுருக்கம்** :-

பிரதிவாதி வாதியிடம் தன் குடும்ப செலவிற்கும், சில்லரை கடன்களை தீர்ப்பதற்கும் கடனாக ரூ.1,50,000/- கேட்டதற்கு வாதி பிரதிவாதிக்கு 30.04.2019 ம் தேதியன்று ரூ.1,50,000/த்தை கடனாக கொடுத்து அதற்கு வட்டியாக ரூ.100/-க்கு ரூ.1/- வட்டி விகிதம் கொடுக்க சம்மதித்து ஒப்புக்கொண்டதின் பேரில் வாதிக்கு பிரதிவாதி 30.04.2019 ம் தேதி மேற்படி கடன் தொகை ரூ.1,50,000/-த்திற்கு பிரதிவாதி 30.01.2012 ம் தேதியன்று ஒரு சின்னக்கனி நாடார் குமாரர் சேர்மக்கனி மற்றும் அவரது மனைவி சீனியம்மாளிடம் கிரையமாக வாங்கிய தபசில் கண்ட சொத்தை மூன்று வருட வாய்தாவில் அடமானம் வைத்து ரூ.1,50,000/-த்தை பெற்றுக்கொண்டார்.

மேற்படி அடமான பத்திரத்தல் கண்ட ஷரத்துக்களின் படி பிரதிவாதி மூன்று வருட வாய்தா வரை ரூ.1,50,000/-த்திற்கு ரூ.100/-க்கு ரூ.1/- வட்டி விகிதம் செலுத்துவதாகவும் மூன்று வருட காலங்களுக்கு பிறகு ரூ.100/-க்கு ரூ.1.50/- செலுத்துவதாகவும் ஒப்புக்கொண்டு பத்திரம் பதிவு செய்து கொடுத்துள்ளார். மேற்படி பத்திரத்தின் படி பிரதிவாதி எந்தவிதமான வட்டியும் கொடுக்கவில்லை. இவ்வாறிருக்கையில் பிரதிவாதி மேற்கொண்டு வாதியிடம் ரூ.50,000/- கடன் கேட்டார். அதற்கு வாதி ரூ.100/- ரூ.2/- விகிதம் வட்டி செலுத்திவிடுவதாக சொல்லி 01.11.2021 ம் தேதி ரூ.50,000/- பெற்றுக்கொண்டு ஒரு பதிவு செய்யப்படாத கடன் ஒப்பந்த பத்திரம் சாட்சிகளின் முன்னிலையில் எழுதிக்கொடுத்த பெற்றுக்கொண்டார். பிரதிவாதி வாதியிடம் பெற்றுக்கொண்ட அடமான கடன் தொகை ரூ.1,50,000/-த்திற்கும், அதுபோக 2021 ல் கடனாக பெற்ற ரூ.50,000/-த்திற்கும் எந்தவொரு வட்டியும் செலுத்தாமலம் காலம் கடத்தி வந்தார். வாதி, பிரதிவாதியிடம் தான் நேரில் சென்று மேற்படி கடன் தொகையை கொடுக்க சொல்லி தான் நேரில் சென்று மேற்படி கடன் தொகையை கொடுக்க சொல்லி கேட்டதற்கு அடமானம் எழுதிக்கொடுத்துள்ளதாக சொல்லியும், மேற்கொண்டு கடன் கேட்டு தொந்தரவு செய்தால் உன் மீது வன்கொடுமை தடுப்பு சட்டத்தில் வழக்கு தாக்கல் செய்து விடுவதாகவும் மிரட்டினார்.

அதனால் வாதி பயந்து கொண்டு பிரதிவாதிக்கு 02.05.2022 ம் தேதி ஒரு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினார். மேற்படி வழக்கறிஞர் அறிவிப்பை பெற்றுக்கொண்ட பிரதிவாதி எந்தவொரு பதிலும் சொல்லாமல் இருந்து வந்தார். இதற்கிடையில் பிரதிவாதி கொடுக்க வேண்டிய அடமான கடன் தொகை ரூ.1,50,000/- மற்றும் கடன் தொகை ரூ.50,000/-த்தையும் கேட்டு சமூகம் நீதிமன்றத்தின் மூலமாகத்தான் பிரதிவாதி கொடுத்த கடன் தொகை

கிடைக்க பெறும் என்ற நம்பிக்கையில் சமூகம் நீதிமன்றத்தில் வாதி, பிரதிவாதி 30.04.2019 ம் தேதி முதல் 29.04.2022 வரை 3 வருட அடமான காலத்திற்கு ரூ.100/-க்கு ரூ.1/- வட்டி செலுத்தியும், அதன் பின்னர் 30.04.2022 ம் தேதி முதல் 14.06.2022 ம் தேதி வரை ரூ.100/-க்கு ரூ.1.50/- வட்டி விகிதமும் அசல் மற்றும் வட்டியை செலுத்த உத்தரவிட்டும், அதேபோன்று வாதியிடம் 01.11.2021 ம் தேதியன்று அடமான கடன் பத்திரம் மூலமாக வாங்கிய கடன் தொகை ரூ.50,000/-த்திற்கு ரூ.100/-க்கு ரூ.2/- வீதம் வட்டி செலுத்த உத்தரவிடக்கோரியும் பிரதிவாதி மேற்படி அடமான தொகை சமூகம் நீதிமன்றத்தில் செலுத்தாவிட்டால் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட தபசில் சொத்தை ஏலத்திற்கு கொண்டு வர இறுதிநிலை தீர்ப்பாணை பிறப்பிக்க கோரியும் வாதி வாதியால் தாவா வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3) **பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிர்வழக்குரை சுருக்கம்** :-

வாதியின் வழக்கு சட்டப்படிக்கும், நியாயப்படிக்கும் செல்லத்தக்கதல்ல. இந்நிர் எதிர்வழக்குரையில் ஒப்புக் கொள்ளப்படும் சங்கதிகளைத் தவிர மற்றவைகளை வாதியே நிரூபணம் செய்ய வேண்டும்.

பிராதின் 4 வது பாராவில் பிரதிவாதி, வாதியிடம் தன் குடும்பச் செலவிற்கும், சில்லரைக் கடன்களை தீர்ப்பதற்கும் கடனாக ரூ.1,50,000/- கேட்டதற்கு இந்நிர் வாதி, பிரதிவாதிக்கு 30.04.2019-ம் தேதியில் ரூ.1,50,000/-த்தை கடனாக கொடுத்து அதற்கு வட்டியாக ரூ.100/-க்கு ரூ.1/- வட்டி விகிதம் கொடுக்க சம்மதித்து ஒப்புக் கொண்டதின் பேரில் வாதிக்கு பிரதிவாதி 30.04.2019-ம் தேதி மேறப்டி கடன் தொகை ரூ.1,50,000/-த்திற்கு இந்நிர் பிரதிவாதி வழக்கிடை சொத்தை மூன்று வருட வாய்தாவில், பிரதிவாதி, வாதிக்கு அடமானம் ஏற்படுத்தி அடமானத் தொகை ரூ.1,50,000/-த்தை இந்நிர் பிரதிவாதி பெற்றுக் கொண்டார்

என்ற விபரம் பிரதிவாதி தரப்பில் மறுக்கப்படுகிறது. மேற்படி விபரத்தை வாதியே நிரூபணம் செய்ய வேண்டும். உண்மையில் வாதி வட்டிக்கு கடன் கொடுக்கும் தொழில் செய்து வருபவர். அவர் ஊரில் பல நபர்களுக்கும் வட்டிக்கு கடன் கொடுக்கும் தொழில் செய்து வருகிறார். மேலும் பிரதிவாதிக்கு, வாதியை பல ஆண்டுகளாக தெரியும். மேற்படி பழக்கத்தின் விளைவாக பிரதிவாதி, வாதியிடம் தன் குடும்ப செலவுக்காக அவ்வப்போது சிறு சிறு தொகை கடனாக பெறுவதும் அதற்கு மாதம் வரை வட்டி செலுத்தி ஒன்றுக்கு ரூ.100/-க்கு 3% முதல் 5% வந்தார். இந்நிலையில் வாதிக்கு 2019-ம் ஆண்டு மார்ச் மாதம் வரை பிரதிவாதி முன்னரே கடன் பெற்றிருந்த வகையில் அசல் வட்டி உட்பட ரூ.50,000/-த்தை திரும்ப செலுத்த வேண்டி இருந்தது.

மேலும் பிரதிவாதி, வாதிக்கு கடன் செலுத்த வேண்டி இருந்த சூழ்நிலையில் பிரதிவாதியை தொடர்பு கொண்ட வாதி உடனடியாக கடன் தொகை ரூ.50,000/- திரும்ப செலுத்த வேண்டும் என்றும், இல்லையெனில் பிரதிவாதிக்கு சொந்தமான தபசில் சொத்தை பிரதிவாதி, வாதிக்கு தர வேண்டிய கடன் தொகையான ரூ.50,000/-த்தை விட மூன்று மடங்கிற்கு அடமான பத்திரம் ஏற்படுத்தி தர வேண்டும். இல்லையென்றால் காவல்துறை மூலம் வாதி, பிரதிவாதி மீது நடவடிக்கை எடுத்து சிறைச்சாலைக்கு அனுப்பி விடுவதாக மிரட்டியதால் பயந்து போன பிரதிவாதி தனது கல்வி அறிவு இன்மையால் 30.04.2019-ம் தேதி வாதிக்கு தாவா அடமான ஆவணத்தை ஏற்படுத்திக் கொடுத்தார். இந்நிலையில் பிரதிவாதி, வாதிக்கு அடமான ஆவணம் ஏற்படுத்திக் கொடுத்த பிறகு பிரதிவாதி மாதா மாதம் ரூ.100/-க்கு ரூ.3/- வீதம் வட்டி செலுத்தி வந்தார். ஆனால் பிராதில்

கூறியுள்ளது போல் பிரதிவாதி, வாதியிடம் 30.04.2019-ம் தேதி கடன் தொகை எதுவும் பெறவும் இல்லை. அதற்கு ஆதரவாக அடமான ஆவணம் ஏற்படுத்தி தரவும் இல்லை.

பிராதின் 5 வது பாராவில் அடமான பத்திரத்தில் கண்ட ஷரத்துக்களின் படி இந்நிர் பிரதிவாதி மூன்று வருட வாய்தா வரை ரூ.1,50,000/-க்கு ரூ.100/-க்கு ரூ.1/- வட்டி விகிதம் செலுத்துவதாகவும் மூன்று வருட காலங்களுக்கு பிறகு ரூ.100/-க்கு ரூ.1.50 செலுத்துவதாகவும் ஒப்புக் கொண்டு பத்திரம் பதிவு செய்து கொடுத்ததாகவும் கூறியுள்ள விசயங்கள் அனைத்தும் பொய்யாகும். உண்மையில் பிரதிவாதி, வாதியிடம் 30.04.2019 ம் தேதி ரூ.1,50,000/- கடன் பெறவும் இல்லை. அதற்கு ஆதரவாக அடமான அவணம் ஏற்படுத்தி தரவும் இல்லை. மேலும் மேற்படி கடன் நிலுவையில் இருக்க பிரதிவாதி, வாதியிடம் மேற்கொண்டு ரூ.50,000/- கடன் கேட்டதாகவும், அதற்கு ரூ.100/-க்கு ரூ.2/- வீதம் வட்டி செலுத்தி விடுவதாக சொல்லி 01.11.2021-ம் தேதி பிரதிவாதி, வாதியிடம் ரூ.50,000/- பெற்றுக் கொண்டு ஒரு பதிவு செய்யப்படாத கடன் ஒப்பந்தப் பத்திரம் சாட்சிகளின் முன்னிலையில் எழுதிக் கொடுத்ததாக வழக்கில் கூறியுள்ள விசயங்கள் அனைத்தும் பொய்யாகும். உண்மையில் வாதி வழக்கில் கூறியுள்ளது போல் 30.04.2019 ம் தேதி ரூ.1,50.000/- கடன் கொடுத்து அந்த தொகையையே பிரதிவாதி, வாதிக்கு வட்டியோ, அசலோ செலுத்தாமல் இருந்த சூழ்நிலையில் மேலும் வாதி, பிரதிவாதிக்கு கடன் ஒப்பந்த பத்திர அடிப்படையில் ரூ.50,000/- கடன் கொடுத்ததாக கூறுவது பொய். பிரதிவாதி அவ்வாறு கடன் தொகை எதுவும் வாதியிடம் இருந்து பெற்றுக் கொள்ளவே இல்லை.

மேலும் பிரதிவாதி, வாதிக்கு முன்னமே வாதியின் வழக்கின்படி கடன் தர வேண்டியதாக உள்ள சூழ்நிலையில் வாதி, பிரதிவாதிக்கு புதியதாக 01.11.2021-ம் தேதி கடன்

கொடுத்ததாக கூறியிருப்பது சட்டப்படி ஏற்றுக் கொள்ளத்தக்கதல்ல. பிராதில் கூறியுள்ளது போல் வாதி, பிரதிவாதிக்கு கடன் கொடுக்கவில்லை. உண்மையில் பிரதிவாதி, வாதிக்கு 30.04.2019-ம் தேதி ஏற்படுத்திக் கொடுத்து இருந்த ஆவணத்தில் உள்ள பிரதிவாதியின் கையொப்பத்தை பார்த்து வாதி 01.11.2021-ம் தேதிய பதிவு செய்யப்படாத கடன் ஒப்பந்தப் கையொப்பம் போன்றே பத்திரத்தை தானே பிரதிவாதியின் கையொப்பம் செய்து ஏற்படுத்தி உள்ளார். 01.11.2021-ம் தேதிய கடன் ஒப்பந்தப் பத்திரத்தில் உள்ள கையொப்பம் பிரதிவாதியின் கையொப்பம் இல்லை. மேற்படி கையொப்பத்தை வாதியே நிரூபணம் செய்ய வேண்டும்.

மேலும் பிராதின் 5-வது பாராவில் வாதி, பிரதிவாதியிடம் தான் நேரில் சென்று மேற்படி கடன் தொகையை கொடுக்கச் சொல்லி கேட்டதற்கு பிரதிவாதி, வாதி மீது வன்கொடுமை தடுப்புச் சட்டத்தில் வழக்கு தாக்கல் செய்து விடுவதாகவும் மிரட்டியதாக கூறியுள்ள விசயங்கள் அனைத்தும் பொய்யாகும். மேற்படி சம்பவம் என்பது நடைபெறாத சூழ்நிலையில் வாதி, பிரதிவாதியை சிறமைப்படுத்த வேண்டும் என்ற எண்ணத்திலேயே மேற்படி விசயத்தை பிராதில் கூறி உள்ளார். மேலும் பிராதின் 5-வது பாராவில் வாதி, பிரதிவாதிக்கு 02.05.2022-ம் தேதி வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பியதாக கூறியுள்ள விசயங்கள் அனைத்தும் பொய்யாகும். மேற்படி விசயத்தை வாதியே நிரூபணம் செய்ய வேண்டும். எனவே, வாதி வழக்கினை பிரதிவாதியின் செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்யவேண்டுமென்று எதிர்வழக்குரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**4)** பிராது, எதிர்வழக்குரை மற்றும் ஆவணங்களை பரிசீலித்து வழக்கு விசாரணைக்காக கீழ்கண்ட எழுவினாக்கள் வனையப்பட்டுள்ளன.

1. பிரதிவாதி வாதியிடமிருந்து 30.04.2019 ம் தேதி ரூ.1,50,000/- கடன் பெற்றுள்ளாரா?

2. பிரதிவாதி பெற்ற கடனுக்காக தாவா சொத்தை பொறுத்து வாதி பெயருக்கு 30.04.2019 ம் தேதி அடமான ஆவணம் எழுதிக்கொடுத்துள்ளாரா?
3. வாதி கோரும் முதல்நிலை தீர்ப்பாணை வாதிக்கு கிடைக்கக்கூடியதா?
4. 01.11.2022 அன்று பிரதிவாதி, வாதியிடம் ரூ.50,000/- கடன் பெற்றுள்ளாரா?
5. பிரதிவாதியிடமிருந்து ரூ.50,000/-யை வசூல் செய்ய வாதி உரிமையுடையவரா?
6. வாதிக்கு கிடைக்கக்கூடிய இதர பரிகாரங்கள் என்ன?

**5)** வாதிகள் தரப்பில் வா.சா.1 மற்றும் வா.சா.2 சாட்சிகள் விசாரிக்கப்பட்டு, வா.சா.ஆ.1 முதல் 6 ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. பிரதிவாதிகள் தரப்பில் பி.வா.சா.1 சாட்சி விசாரிக்கபபட்டு, பி.வா.சா.ஆ.1 ஆவணம் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

**6) <u>எழுவினாக்கள் 1 முதல் 3 க்கான தீர்வு :-</u>**

இருதரப்பும் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டது. ஆவணங்களை பரிசீலனை செய்ததில், தாவா சொத்து புத்தூர் கிராமம், வார்டு எண்.1, காட்டுநாயக்கன் காலணியில் கதவு எண்.113 உள்ள காரை வீடும் மற்றும் காலிமனையாகும். மேற்படி தபசில் சொத்து பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட சொத்தாகும். மேற்படி பிரதிவாதி கடந்த 30.04.2019 அன்று வாதியிடம் ரூ.1,50,000/- கடனாக பெற்றுக்கொண்டு மேற்படி கடனுக்கு வட்டியாக ரூ.100/-க்கு, ரூ.1/- வீதம் செலுத்திவிடுவதாக கூறி தபசில் கண்ட சொத்தை வாதியின் பெயருக்கு 30.04.2019 அன்று ஒரு பதிவு செய்யப்பட்ட அடமான ஆவணம் எழுதிக்கொடுத்துள்ளார். மேற்படி அடமானத்திற்கான காலவரம்பு 3 வருட காலம் ஆகும். மேற்படி மூன்று வருட காலவரம்பு முடிந்த பின்பும் வாதியிடம் வாங்கிய கடனை பிரதிவாதி திருப்பி செலுத்தவில்லை. இந்நிலையில் பிரதிவாதி, வாதியிடம் 01.11.2021 அன்று மேற்கொண்டு ரூ.50,000/- கடனாக பெற்றுக்கொண்டு மேற்படி கடனுக்கு ஆதரவாக

சாட்சிகள் முன்னிலையில் ஒரு பதிவு செய்யப்படாத கடன் ஒப்பந்த பத்திரம் எழுதிக்கொடுத்தார் என்றும், வாதியிடம் அடமான பத்திரத்தின் படி ரூ.1,50,000/- கடனையும், 01.11.2021 அன்று பெற்ற ரூ.50,000/- கடனுக்கு அசல் மற்றும் வட்டி தொகையை செலுத்ததால் வாதி இந்த வழக்கை தொகையை வசூலிக்க கோரியும், முதல்நிலை தீர்ப்பாணை பிறப்பிக்க வேண்டியும் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார்.

வாதி தரப்பு வழக்கறிஞர் தனது வாதத்தின் போது, வா.சா.ஆ.1 ன் படி தாவா சொத்து பிரதிவாதிக்கு பாத்தியப்பட்டது என்றும், மேற்படி பிரதிவாதி, வாதியிடம் 30.04.2019 அன்று ரூ.1,50,000/- கடனாக பெற்றுக்கொண்டு மேற்படி கடனுக்கு ஆதரவாக வாதி பெயருக்கு ஒரு பதிவு செய்யப்பட்ட அடமான பத்திரம் எழுதிக்கொடுத்துள்ளார் என்றும், இந்நிலையில் வாதி அசல் மற்றும் வட்டி தொகையை செலுத்தாத நிலையில், 01.11.2021 அன்று மேற்கொண்டு வாதியிடம் ரூ.50,000/- பெற்றுக்கொண்டு பிரதிவாதி கடன் ஒப்பந்த பத்திரம் எழுதிக்கொடுத்துள்ளார் என்றும், வாதி, வா.சா.1, 2 சாட்சியத்திலிருந்தும், வா.சா.ஆ.1 முதல் 6 வரையிலான ஆவணங்களிலிருந்தும், தன் வழக்கை நிரூபித்துள்ளார் என்றும், எனவே, வாதி கோரிய படி தீர்ப்பும், தீர்ப்பாணையும் பிறப்பிக்க வேண்டுமென்று வாதுரை செய்தார்.

பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் தனது வாதத்தின் போது, வாதியிடம் 30.04.2019 அன்று ரூ.1,50,000/- கடனாக பெற்றுக்கொண்டு அடமான ஆவணம் எழுதிக்கொடுத்தது உண்மை என்றும், அதன் பின்பு ரூ.50,000/- பிரதிவாதி பெற்றுக்கொண்டதாக கூறுவது நம்பக்கூடியதாக இல்லை என்றும், ஏற்கனவே வாங்கிய

கடனுக்கு அசல் மற்றும் வட்டி தொகை செலுத்தாத நிலையில் மேற்கொண்டு வாதி, பிரதிவாதிக்கு கடனாக கொடுத்தது ஏற்புடையதாக இல்லை என்றும், எனவே, வாதி கோரிய படி வாதி தகுந்த சாட்சியங்கள் மற்றும் ஆவணங்கள் மூலம் நிரூபிக்கவில்லை என்றும், எனவே, வழக்கை தள்ளுபடி செய்ய வேண்டுமென்று வாதுரை செய்தார்.

ஆவணங்களை பரிசீலினை செய்ததில், 30.12.2012 அன்று பிரதிவாதி சீனியம்மாள் வகையறாவிடமிருந்து தாவா சொத்தை பொறுத்து கிரையம் பெற்று அனுபவம் செய்து வந்த நிலையில் 30.04.2019 அன்று தாவா சொத்தின் மீது வாதியிடமிருந்து, பிரதிவாதி ரூ.1,50,000/- கடனாக பெற்றுக்கொண்டு மேற்படி கடனை மூன்று வருட காலத்திற்குள் திருப்பி செலுத்துவதாக கூறி வா.சா.ஆ.2 அடமான ஆவணம் சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்து கொடுத்துள்ளார். மேற்படி அடமான பத்திரத்தை பொறுத்த வரை பிரதிவாதி தரப்பில் மறுக்கப்படவில்லை. பி.வா.சா.1 தனது சாட்சியத்தில் நான் வாதியிடம் முதலில் ரூ.1,50,000/- கடனாக பெற்றுக்கொண்டு அடமான ஆவணம் எழுதிக்கொடுத்துள்ளேன் என்றால் சரிதான் என்று ஒப்புக்கொண்டு சாட்சியம் அளித்துள்ளார். ஆனால் பிரதிவாதியே தனது சாட்சியத்தில் ரூ.1,50,000/- பெற்றுக்கொண்டு அடமான பத்திரம் எழுதிக்கொடுத்ததாக ஒப்புக்கொண்டுள்ளார். வா.சா.1 ன் சாட்சியத்திற்கு ஆதரவாக வா.சா.2 ம் தனது சாட்சியத்தில் மேற்படி அடமான கடன் கொடுத்தார் என்றும், மேற்படி அடமான கடன் பத்திரத்தில் சாட்சி கையொப்பம் செய்ததாக சாட்சியம் அளித்துள்ளார். வாதி வா.சா.1, 2 சாட்சியத்திலிருந்தும், வா.சா.ஆ.1 முதல் 5 வரை ஆவணங்களிலிருந்தும் வழக்கை நிரூபித்துள்ளதால் வாதி கோரும்

பரிகாரம் வாதிக்கு கிடைக்கக்கூடியது என்று முடிவு செய்து அவ்வாறே மேற்படி எழுவினாக்கள் வாதிக்கு ஆதரவாக விடை காணப்படுகிறது.

**7) <u>எழுவினாக்கள் 4, 5 க்கான தீர்வு :-</u>**

வாதி தரப்பில் மேற்படி 30.04.2019 ம் தேதியிட்ட அடமான கடன் பெற்றதற்கு பிறகு 2 வருடங்கள் கழித்து 01.11.2021 அன்று வாதியிடம் பிரதிவாதி ரூ.50,000/- கூடுதலாக கடனாக பெற்றுக்கொண்டு மேற்படி கடனுக்கு ஆதரவாக வா.சா.ஆ.3 கடன் ஒப்பந்த பத்திரம் எழுதிக்கொடுத்தார் என்றும், மேற்படி கடன் ஒப்பந்த பத்திர தொகையை பிரதிவாதி செலுத்தவில்லை என்றும், மேற்படி தொகையை வசூலிக்க கோரி இந்த வழக்கில் பரிகாரம் கோரப்பட்டுள்ளது. ஆனால் பிரதிவாதிகள் தரப்பில் மேற்படி 30.04.2019 தேதியிட்ட அடமான கடன் தொகையை பொறுத்து அசல் மற்றும் வட்டி தொகை செலுத்தவில்லை என்றும், வாதியே தனது வழக்குரையில் குறிப்பிட்டுள்ளார் என்றும், மேற்படி தொகையை செலுத்தாத நிலையில், அசல் மற்றும் வட்டி தொகையை செலுத்தாத நிலையில் கூடுதலாக ரூ.50,000/- கடனாக கொடுத்தது ஏற்புடையதாக இல்லை என்று எடுத்துரைக்கப்பட்டது.

ஆவணங்களை பரிசீலினை செய்ததில், வா.சா.ஆ.3 கடன் ஒப்பந்த பத்திரம் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி கடன் ஒப்பந்த பத்திரத்தின் படி கடந்த 01.11.2021 அன்று பிரதிவாதி, வாதியிடம் ரூ.50,000/- கடனாக பெற்றுக்கொண்டு மேற்படி தொகையை மூன்று வருட காலத்திற்குள் செலுத்திவிடுவதாக குறிப்பிட்டு வா.சா.ஆ.3 எழுதிக்கொடுக்கப்பட்டுள்ளது. மேற்படி வா.சா.ஆ.3 ல் ஏற்கனவே வா.சா.ஆ.1 ல் கடன் பெற்ற விபரங்கள் குறிப்பிடப்படவில்லை. அதேபோன்று 30.04.2019 அன்று வா.சா.ஆ.2 ன் படி

அடமான ஆவணம் எழுதிக்கொடுக்கப்பட்ட நிலையில், அசல் மட்டும் செலுத்தவில்லை என்று வாதி வழக்குரையில் குறிப்பிட்டுள்ளார்.

வா.சா.1 தனது சாட்சியத்திலும், " பிரதிவாதி முன்னமே பெற்றுக்கொண்ட கடனுக்கு வட்டி எதுவும் செலுத்தவில்லை என்று வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான் " என்று சாட்சியம் அளித்துள்ளார்.

மேற்படி 30.04.2019 அடமான ஆவணத்தில் கண்ட அசல் மற்றும் வட்டி தொகையை செலுத்ததாத நிலையில் பிரதிவாதிக்கு மேற்கொண்டு கடன் தொகை கொடுத்தது சம்பந்தமாக வாதி தரப்பில் வா.சா.2 சாட்சியாக விசாரணை செய்யப்பட்டுள்ளார். மேற்படி வா.சா.2 தனது சாட்சியத்தில் 30.04.2019 அன்று அடமானத்தின் பேரில் ரூ.1,50,000/-மும், வட்டி தொகை கொடுத்த விபரம் தெரியும் என்றும், வட்டியை முறையாக பிரதிவாதி செலுத்தாத நிலையில் கூடுதல் கடன் கேட்டார் என்றும், அதற்கு ஏற்றுக்கொண்ட பிரதிவாதி, வாதிக்கு 01.11.2021 அன்று ரூ.50,000/- கடன் கொடுத்தார் என்றும், மேற்படி வா.சா.ஆ.3 ல் சாட்சி கையொப்பம் செய்தேன் என்று சாட்சியம் அளித்துள்ளார்.

ஆனால், மேற்படி வா.சா.2 தனது சாட்சியத்தில் " பிரதிவாதி 2021 ல் அடமான கடன் பெற்றுள்ளார். 2021 ம் ஆண்டுக்கு முன்பாகவே பிரதிவாதி வாதியிடம் கடன் பெற்ற விபரமும், வட்டி செலுத்தவில்லை என்ற விபரமும் எனக்கு தெரியும் " என்றும்,

" வாதி வட்டி கொடுக்கும் தொழில் செய்து வருவதால் பிரதிவாதி சிறுக சிறுக ரூ.50,000/- கடன் பெற்றிருந்தார் அதற்கு வாதி மும்மடங்கு தொகை போட்டு ரூ.1,50,000/-த்திற்கு அடமான ஆவணம் எழுதிக்கொண்டார் என்றால் மும்மடங்கு

தொகை போட்டு எழுதிய விவரம் எனக்கு தெரியாது ஆனால் ரூ.50,000/- கொடுத்த விபரம் எனக்கு தெரியும் " என்று குறுக்குவிசாரணையில் சாட்சியம் அளித்துள்ளார்.

மேற்படி வா.சா.2 குறுக்கு விசாரணையில் பரிசீலினை செய்ததில், வா.சா.2 க்கு வா.சா.ஆ.3 ன் படி பணம் கொடுத்த விபரம் தெரியாது என்றும், அடமான ஆவணத்தில் கண்ட தொகை விபரம் எதுவும் தெரியாது என்றும் தெரியவருகிறது. வா.சா.2 ன் சாட்சியம், வா.சா.1 ன் சாட்சியத்திற்கு ஆதரவாக அமையவில்லை. வாதியிடம் ஏற்கனவே வா.சா.ஆ.1 ன் படி கடன் பெற்ற நிலையில், அசல் மற்றும் வட்டியும் செலுத்தாத நிலையில் கூடுதலாக பணம் கொடுத்ததாக கூறும் வாதமானது ஏற்புடையதாக இல்லை என்றும், எனவே, வா.சா.1 ன் சாட்சியத்திற்கும், வா.சா.2 ன் சாட்சியத்திற்குமிடையே முரண்பாடு அமைந்துள்ளது.

பிரதிவாதி தரப்பிலும், மேற்படி ரூ.50,000/- கடன் பெற்றது சம்பந்தமாக மறுக்கப்பட்டுள்ளது. மேற்படி வா.சா.ஆ.3 ல் கண்ட கையொப்பம் பிரதிவாதியின் கையொப்பம் இல்லை என்று மறுக்கப்பட்டுள்ள நிலையில், வாதி தரப்பில் மேற்படி வா.சா.ஆ-3 ல் கண்ட கையொப்பம் பிரதிவாதியின் கையொப்பம் தான் என்று நிரூபிப்பதற்கு வாதி தரப்பில் எவ்வித சட்ட நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. எனவே, வா.சா.1 சாட்சியத்திற்கும், வா.சா.2 சாட்சியத்திற்குமிடையே முரண்பாடாக அமைந்துள்ள நிலையில், வாதியிடம் பிரதிவாதி ரூ.50,000/- கடன் பெற்றது சம்பந்தமாக தகுந்த சாட்சியங்கள் மற்றும் ஆவணங்கள் மூலம் நிரூபிக்க தவறியுள்ளார் என்றும், எனவே வாதி கோரும் வாதிக்கு கிடைக்கத்தக்கதல்ல என்று மேற்படி எழுவினாவிற்கு வாதிக்கு எதிராக விடை காணப்படுகிறது.

**8) எழுவினா 6 க்கான தீர்வு :-**

எழுவினாக்கள் 1, 2, 3 வாதிக்கு ஆதரவாகவும், எழுவினாக்கள் 4, 5 வாதிக்கு எதிராகவும் விடை காணப்பட்டுள்ளதால் வாதிக்கு வேறு பரிகாரம் எதுவும் கிடைக்கத்தக்கதல்ல என்று முடிவு செய்து அவ்வாறே மேற்படி எழுவினாவிற்கு விடை காணப்படுகிறது.

**9) முடிவில்**,

1) வழக்கு செலவு தொகையுடன் பகுதியாக அனுமதிக்கப்படுகிறது.

2) வாதிக்கு, பிரதிவாதி ரூ.2,06,100.00/-ம், அதில் ரூ.1,50,000/-க்கு வழக்கு தாக்கல் செய்த நாள் முதல் தீர்ப்பாணை காலம் வரைக்கும் 9% ஆண்டு வட்டியுடனும், தீர்ப்பாணை தேதி முதல் தொகை வசூலாகும் தேதி வரைக்கும் 6% ஆண்டு வட்டியுடனும், இரண்டு மாதத்திற்குள் செலுத்த வேண்டுமென்று முதல்நிலை தீர்ப்பாணை பிறப்பித்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கின்றது.

3) வாதி, பிரதிவாதிக்கு கடந்த 01.11.2021 அன்று ரூ.50,000/- கொடுத்ததாக வாதி கோரும் பரிகாரத்தை பொறுத்து வழக்கு தள்ளுபடி செய்யப்படுகிறது.

இத்தீர்ப்புரையானது என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, பின்னர் என்னால் சரிபார்த்து பிழைநீக்கம் செய்யப்பட்டு, 2026 ம் ஆண்டு ஜூன் திங்கள் 01 ம் நாள் திறந்த நீதிமன்றத்தில் என்னால் அவையறியப் பகரப்பட்டது.

SHUNMUGAVEL RAJ

Digitally signed by SHUNMUGAVEL RAJ

சார்பு நீதிபதி,
இராஜபாளையம்.

**வாதி தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகள்**:-

| | | |
|---|---|---|
| வா.சா.1 | - | தங்கராஜ் |
| வா.சா.2 | - | காளிராஜ் |

**<u>வாதி தரப்பில் குறியீடு செய்யப்பட்ட சான்றாவணங்கள்</u>**:-

| | | | |
|---|---|---|---|
| வா.சா.ஆ.1 | - | 30.01.2012 | பிரதிவாதி சேர்மக்கனி சீனியம்மாள் ஆகியோர்களிடம் இருந்து பெற்ற கிரையப்பத்திரம் அசல் |
| வா.சா.ஆ.2 | - | 30.04.2019 | அடமான கடன் பத்திரம் அசல் |
| வா.சா.ஆ.3 | - | 01.11.2021 | கடன் ஒப்பந்தப்பத்திரம் அசல் |
| வா.சா.ஆ.4 | - | 02.05.2022 | வழக்கறிஞர் அறிவிப்பு மற்றும் அஞ்சலக ரசீது அலுவலக நகல் |
| வா.சா.ஆ.5 | - | 05.05.2022 | ஒப்புகை அட்டைகள் அசல் |
| வா.சா.ஆ.6 | - | | ஆதார் அட்டை நகல் |

**<u>பிரதிவாதி தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகள் :-</u>**

பி.வா.சா.1 - சந்தனமாரி

**<u>பிரதிவாதிகள் தரப்பில் விசாரிக்கப்பட்ட சான்றாவணங்கள்:-</u>**

பி.வா.சா.ஆ.1 - பி.வா.சா.1 ன் ஆதார் அடையாள அட்டை -- ஜெராக்ஸ்

SHUNMUGAVEL RAJ Digitally signed by SHUNMUGAVEL RAJ

சார்பு நீதிபதி,
இராஜபாளையம்.